**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.97/2024</u>**

ம.சா.1 மாது த/பெ அருணாச்சலம் நாள் :16.07.2026

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் என் மகனுக்கு அடிப்பட்டது. என் மனைவியுடன் என் மகன் சாலையை கடக்கும் போது தான் ஏற்பட்டது என்றால் இல்லை, சாலையை கடக்க இருவரும் நின்று இருந்த போது மோதிவிட்டார். இராவுத்தம்பட்டியிலிருந்து எலவம்பட்டி நோக்கி வந்த டாடா ஏசி வாகனம் அண்ணாமலை மளிகைக்கடைக்கு எதிரில் என் மகன் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அண்ணாமலை மளிகைக்கடையில் பொருட்கள் வாங்கி கொண்டு எதிரில் வந்து சாலையை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சாலையை கடக்கவில்லை. என் மனைவி என் மகனை கவனக்குறைவாக சாலையில் விட்டதால் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. முறையாக சிகிச்சை அளித்த பின்னர் பூரணமாக குணமடைந்துவிட்டார் என்றால் இல்லை. எதிர்கால மருத்துவ செலவுகள் உள்ளது என்று நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ரூ.5,00,000/- மருத்துவ செலவுகள் கோரிவிட்டு ஆனால் ரூ.4,00,000/- அளவிலயே ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.20 ல் ரூ.31,580/- ம.சா.ஆ.19 ஆவணத்திலயே காட்டப்பட்டுள்ளது என்பதால் அதை தனியாக கோர முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.21 கார் வாடகை ரசீது வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. என் மனைவியின் அஜாக்கிரதையை பொறுத்த வரையில் மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி, திருப்பத்தூர்.